செய்தி வெளியீடு எண்: 088/2017 நாள்: 13.02.2017

**சரியான திட்டமிடுதல் மற்றும் விடாமுயற்சி இருந்தால் அரசு உயர் பதவிகளை எளிதில் அடையலாம்!**

**பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் பள்ளி கல்லூரி விடுதிகளில் பயிலும் 10, 12ம் வகுப்புகளில் தங்கி படிக்கும் மாணவ மாணவிகளுக்கான வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் பேச்சு!!**

வேலூர் மாவட்டம் காட்பாடி அனைவருக்கம் கல்வி இயக்க திட்ட அலுவலகத்தில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நலம் மற்றம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் இணைந்து பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் சிறுபான்மையினர் நல பள்ளி மற்றும் கல்லூரி விடுதிகளில் தங்கி படிக்கும் மாணவ மாணவியருக்கான வாழ்க்கை வழிகாட்டி நிகழ்ச்சி 12.2.2017 முதல் 14.2.2017 வரை நடைப்பெறுகிறது. இந்த நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.சி.அ.ராமன், இ.ஆ.ப., அவர்கள் கலந்துக்கொண்டு சிறப்புரையாற்றியதாவது.

வாழ்கையில் வெற்றி பெற வேண்டும் என்று துடிக்கும் இன்றைய கால இளைஞர்கள் படித்து முடித்த உடனே கை நிறைய சம்பாதிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் வேலைக்கு சென்று அந்த வேலையில் மனநிறைவு இல்லாமல் இருப்பது தற்போதைய காலகட்டத்தில் அதிகமாக உள்ளது. அரசு துறையில் உயர் பதவிகளை அடையவேண்டும் என்று நினைத்து கொண்டு இருந்தால் மட்டும் போதாது. அதற்கு பொது அறிவு கடுமையான அர்பணிப்பு, தீராத உழைப்பு விடா முயற்சி, சரியான திட்டமிடுதல் போன்ற பண்புகளை கொண்டு தொடர்ந்து அவ்வப்போது அரசு துறை தேர்வுகளை எழுதவேண்டும். முதல் முறையாக தேர்வுகளை எழுதிய உடனே தனக்கு பதவி கிடைத்து விடவேண்டும் எண்ணத்தில் கடமைக்காக எழுதி அவற்றில் தோல்வி அடைந்து விட்டால் அடுத்த முறை முயற்சி செய்வதில்லை. இந்த நிகழ்வு இளைஞர்களிடையே அதிக அளவில் தற்போது உள்ளது. ஆனால் விடா முயற்சியுடன் செயலாற்றும் நபர்கள் வெற்றி பெற்று சிறப்பாக உயர் பதவிகளில் பணியாற்றி வருகின்றனர்.

போட்டி நிறைந்த இவ்வுலகில் உயர் நிலையை அடைய கனவுகளுடன் கடின உழைப்பும் விடா முயற்சியும் கண்டிப்பாக வேண்டும். கல்லூரி படிப்பை முடித்த உடனே வருங்கால சரியான இலக்கு என்ன என்பதை முறையான திட்டமிடுதல் மூலம் திட்ட மிட்டு அவற்றை அடைய அயராது உழைத்து வெற்றி பெற வேண்டும். இளைஞர்கள் வாழ்க்கையில் வெற்றி பெற்று சிறந்து விளங்க தற்போது அரசு பல்வேறு விதமான பயிற்சிகளை இலவசமாக வழங்கி வருகிறது அதனடிப்படையில் தற்போது பள்ளி மற்றும் கல்லூரிகளில் படிக்கும் மாணவர்களுக்கு தற்போது இந்திய ஆட்சிப்பணி தேர்வு சிறப்பு பயிற்சி வகுப்புகள் நடத்தப்படுகிறது இவற்றை மாணவர்கள் உத்வேகத்துடன் படித்து எதிர்காலத்தில் ஒரு சிறந்த அரசு உயர் அலுவலராக உயரவேண்டும் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் துணை இயக்குநர் வேலைவாய்ப்பு திரு.சந்திரன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் நல அலுவலர் திரு.ஜெயபிரகாஷ், உதவி இயக்குநர் வேலைவாய்ப்பு திரு.அருணகிரி, அனைவருக்கும் கல்வி இயக்கம் திரு.ஜோதிஷ்வரன் மற்றும் மாணவர்கள் கலந்துக்கொண்டனர்.

வெளியீடு:

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், வேலூர்-9.

13/2/17